BN-7

# ஃபிஷிங் தாக்குதல்கள் குறித்து வாடிக்கையாளர்களுக்கான முக்கிய ஆர்பிஐ அறிவிப்பு

- **ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியா (இந்திய ரிசர்வ் வங்கி) அனுப்பியதாக கோரப்படும் ஃபிஷிங் மின்னஞ்சல்களுக்கு பதில் அனுப்பாதீர்**

- ''வங்கி வாடிக்கையாளர்களை தங்கள் வங்கிக் கணக்கு **விபரங்களை** புதுப்பிக்க அழைப்பு விடுக்கும்'' மின்னஞ்சல்கள் இந்திய ரிசர்வ் வங்கி பெயரில் அனுப்பப்படுகின்றன என்பது அதன் கவனத்திற்கு வந்துள்ளது.

- இது போன்ற எந்த விதமான மின்னஞ்சல்களும் அனுப்பப்படவில்லை என்று ரிசர்வ் வங்கி திட்டவட்டமாக மறுத்துள்ளது. ரிசர்வ் வங்கி அல்லது வங்கிகள், எந்தவொரு நோக்கத்திற்காகவும் வங்கிக் கணக்கு விபரங்களை அளிக்குமாறு ஒரு போதும் கேட்டுக் கொள்ளாது. **இது போன்ற மின்னஞ்சல்களுக்கு பதிலளிக்க வேண்டாம் என்றும், எந்தவொரு நோக்கத்திற்காகவும் யாருடனும் தமது வங்கிக் கணக்கு விபரங்களை பகிர்ந்து கொள்ள வேண்டாம் என்றும் ரிசர்வ் வங்கி பொது மக்களைக் கேட்டுக் கொள்கிறது.**

- கடிதங்கள், மின்னஞ்சல்கள், கையடக்க தொலைபேசி, SMSகள் போன்றவை மூலம் வசீகரமான சலுகைகளையும் மோசடிக்காரர்கள் பொது மக்களுக்கு அனுப்புகிறார்கள். இது போன்ற சலுகைகளை நம்ப வைக்க, இவை பெரும்பாலும் இந்திய ரிசர்வ் வங்கி போன்ற ஏதேனும் பொதுத் துறை அமைப்புகளுடையது போல் தோற்றமளிக்கும் லெட்டர்ஹெட்கள் / இணையதளங்களிலிருந்து அனுப்பப்படுகின்றன. இச்சலுகைகள் இது போன்ற பொதுத் துறை அமைப்புகளின் அதிகாரிகளால் கையெழுத்திடப்பட்டுள்ளதாக காட்டப்படுகின்றன. அதிகாரிகளின் பெயர்கள் மட்டுமே சரியாக இருக்கும் ஆனால் அவர்களின் கையெழுத்துக்கள் பொய்யானவை. ரிசர்வ் வங்கி / பொதுத் துறை நிறுவனங்களின் ஏதேனும் ஒரு துறையில் பணிபுரிவதாகக் கூறப்படும் ஒரு பொய்யான நபரின் தொடர்பு விபரங்களும் சலுகை ஆவணத்தில் அளிக்கப்பட்டிருக்கும். **இலாபங்களை அள்ளித் தருவதாக ஏமாற்றும் இது போன்று பொய்யான சலுகைகளை நம்பி ஏமாற வேண்டாம் என்று பொது மக்களை எச்சரிக்கிறது ரிசர்வ் வங்கி.**

- **பெயர் தெரியாத அமைப்புகள் அளிக்கும் இது போன்ற மோசடி சலுகைகளில் கலந்து கொள்ள பணம் எதுவும் செலுத்த வேண்டாம் என்று பொது மக்கள் எச்சரிக்கப்படுகிறார்கள்,** ஏனென்றால் இது போன்ற பணம் செலுத்தல்கள் சட்ட விரோதமானவை மற்றும் இந்தியாவில் வசிக்கும் ஒருவர், இந்தியாவுக்கு வெளியே நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இது போன்று பணம் சேகரிப்பது, செலுத்துவது போன்ற செயல்களில் ஈடுபட்டால், அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டம், 1999 சட்டத்தை மீறிய குற்றத்திற்காக தண்டிக்கப்படுவார்கள். இது போன்ற மோசடி சலுகைகள் குறித்து பொது மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் மற்றும் இதில் சிக்கி ஏமாறாமல், இது போன்ற சலுகைகள் கிடைக்கப் பெற்றால் உடனடியாக உள்ளூர் காவல்துறை / சைபர்-கிரைம் அதிகாரிகளிடம் வழக்கு பதிவு செய்ய வேண்டும்.

- **ரிசர்வ் வங்கி, எந்தப் பெயரிலும் எந்தவிதமான நிதி ஏற்பாடுகளையும் மேற்கொள்வதில்லை மற்றும் இது போன்ற மோசடி திட்டங்களுக்காக செலுத்தப்படும் பணத்தை மீட்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளாது.**

Validity : Permanent
Ver : BN7_V1.0_Sep11

எச் டி எஃப் சி பேங்க்

நாங்கள் உங்கள் உலகை புரிந்து கொண்டுள்ளோம்